# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர் : 12 இதழ் : 03 மார்ச் 2026 தனிப்பிரதி – ரூ.20/– ஆண்டு சந்தா ரூ.200/–
Vol : 12 Issue No : 03 March 2026 Single Copy – Rs.20/- Annual Subscription Rs.200/-



# அவர் மரணம் நம் மகுடம்


COMING SOON
PRE ORDER NOW!
94888 45628
95975 55066
பரலோகமே
என் சொந்தமே
Dr. Ananda Stira

# அன்பரின் ஊழியம்

## ஆசிரியர் உரை



DR. JANE JOSHUA

கிறிஸ்துவுக்குள் அன்பான பங்காளர்கள் ஒவ்வொருவரையும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் அன்போடு வாழ்த்துகிறேன். இந்த புதிய மாதத்திலும் உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் தம் கிருபையின்படி நடத்தி ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன்.

**அங்கே அவன் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவும் பகலும் நாற்பது நாள் கர்த்தரோடே இருந்தான்,.... யாத்தி.34:28.**

இஸ்ரவேல் மக்களை எகிப்து தேசத்திலிருந்து வழிநடத்தி செல்லவேண்டிய ஒரு பெரிய பொறுப்பு மோசேக்கு கொடுக்கப்பட்டு இருந்தது. ஆயினும் மோசே அனைத்தையும் நிறுத்திவிட்டு நாற்பது நாள் இரவும் பகலும் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் கர்த்தரோடு இருந்தான். இலட்சக்கணக்கான இஸ்ரவேல ஜனங்களை குறித்த பாரம் அவனுக்கு இருந்தப்போதும் கர்த்தருடைய சமூகத்தில் அவன் காத்திருப்பதில் அவன் தவறவில்லை. நாற்பது நாட்கள் முடிந்து மக்களை நோக்கி அவன் வரும்பொழுது அவன் முகம் பிரகாசமாயிருந்தது. மக்களால் அவன் முகத்தை பார்க்க முடியவில்லை. அந்த அளவிற்கு அவன் முகம் பிரகாசித்தது. அவன் பூமியில் வாழ்ந்த நாளெல்லாம் ஒருவனும் அவனை எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆம், உங்கள் வாழ்க்கையிலும் புயல், மழை, வெள்ளம் போன்ற கஷ்டங்கள், வியாதிகள், பொருளாதார நெருக்கடிகள், குடும்ப பிரச்சினைகள் என பல போராட்டங்கள் வந்தாலும் சோர்ந்து போகாதீர்கள். எல்லா நிலையிலும் கர்த்தரை நோக்கிப் பாருங்கள். அப்பொழுது உங்கள் பிரச்சனைகளை கர்த்தர் பார்த்துக் கொள்வார். உங்கள் முகங்கள் வெட்கப்பட விடமாட்டார். **அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள், அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. சங்.34:5.**


ஆசிரியர் / வெளியிடுபவர்: Dr. ஜேன் ஜாஷ்வா

**சந்தா விபரம்**

இந்தியா: ஆண்டு சந்தா ரூ.200/- ஆயுள் சந்தா ரூ.2000/-
வெளிநாடு: ஆண்டு சந்தா ரூ.1500/- ஆயுள் சந்தா ரூ.15000/-



காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை

ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : +91 9488845627

தெலுங்கு: +91 9944536343

மலையாளம்: +91 9488932937

e-mail: info@mojindia.org Website: www.ministryofjesus.in

முகவரி: அன்பரின் ஊழியம், 40 S.P.K. தெரு, உறையூர், திருச்சி – 620 003
Address: Ministry of Jesus, 40 S.P.K. Street, Woraiyur, Trichy – 620 003

பிப்ரவரி மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். மார்ச் மாதம் நாகர்கோவில், மற்றும் திருச்சியில் நடைபெறயிருக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள். கூட்டங்களை நடத்துவதற்கு மட்டும் நாம் இலட்சக்கணக்கில் செலவுகளை செய்கிறோம். ஆகவே கூட்டங்களுக்கு ஸ்பான்சர் பண்ணக்கூடிய பங்காளர்களை கர்த்தர் தரும்படியாக விசேஷமாக ஜெபியுங்கள். உங்களுடைய நண்பர்களுக்கும் அன்பரின் ஊழியத்தைக் குறித்து அறிமுகப்படுத்தி அவர்களும் கூட்டத்தை தாங்குவதற்கு ஊக்கப்படுத்துங்கள்.

Ministry of Jesus சமூகவலைதளம் வாயிலாக வெளிவருகிற அனைத்து நிகழ்ச்சிகளையும் தவறாமல் பார்த்து subscribe செய்யுங்கள். உங்கள் நண்பர்களுக்கு share பண்ணுங்கள்.

எங்கள் அப்பாவின் நல்ல சுகத்திற்காக ஊக்கமாய் ஜெபியுங்கள். சமீபகாலமாக சற்று பெலவீனப்பட்டு இருக்கிறார்கள். எனவே உங்கள் தனிஜெபத்திலும் குடும்ப ஜெபத்திலும் நீங்கள் அப்பாவின் சுகத்திற்காக இன்னும் அதிகமாய் ஜெபியுங்கள். தொடர்ந்து எங்கள் அனைவருடைய நல்ல ஆரோக்கியத்திற்காகவும், எங்கள் பயணங்களில் கர்த்தருடைய பாதுகாப்பு உண்டாகவும் ஜெபியுங்கள்.

கிறிஸ்துவின் பணியில்
Dr. ஜேன் ஜாஷ்வா
jane@mojindia.org








# அவர் மரணம் நம் மகுடம்

Jonathan Moses Raj Stira

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே. இந்த மாத தேவ செய்தியின் வாயிலாக உங்களோடு பேசுவதில் நான் அதிக மகிழ்ச்சி அடைகிறேன். நாம் அனைவரும் லெந்து நாட்களில் இருந்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த மாதம் கிறிஸ்துவின் மரணத்தை குறித்து நாம் தியானிப்போம். அதற்கு இந்த செய்தி உதவியாக இருக்கும் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

மனித குலத்தில் ஏழையானாலும், செல்வந்தரானாலும் மரணம் என்பது அனைவருக்கும் பொதுவான, துக்கமான நிகழ்வாகவே இருந்து வருகிறது. மரணம் யாராலும் தாங்க முடியாத, தடுக்க முடியாத ஒரு காரியம். நம் மரணம் இந்த உலக வாழ்க்கைக்கு ஒரு முடிவு உண்டாக்கி, நித்திய வாழ்க்கைக்கு ஒரு துவக்கமாக இருக்கிறது.

ஒரு மரணம் எப்படி மகுடமாக மாறமுடியும் என்ற கேள்வி உங்களுக்கு வருகிறதா? ஆம், கிறிஸ்துவின் மரணம் மனித குலத்திற்கே சந்தோஷத்தை தருவதாக இருப்பதால் நமக்கு மகுடமாக அமைகிறது. ஒரு கிறிஸ்தவன், இயேசுவை நன்கு அறிந்தவன் சிலுவையைக் குறித்தே மேன்மை பாராட்ட வேண்டும். இன்றைக்கு சிலுவையைக் குறித்து மேன்மை பாராட்டுகிறோம். ஆனால் அந்த சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைக்குறித்து மேன்மை பாராட்டுகிறோமா? என சிந்தித்துப் பாருங்கள்.

**கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன், ஆயினும், பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார், நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். கலா.2:20**

அன்பானவர்களே! நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காக சிலுவையில் மரித்தார். சிலுவை மரணத்தின் மூலம் நம்முடைய அக்கிரமங்கள், மீறுதல்கள், பாவ, சாபங்கள் எல்லாவற்றையும் அவர் ஏற்றுக்கொண்டார் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இவையெல்லாம் ஆண்டவர் நம்மீது கொண்ட அன்பினால் தம்மைத்தாமே சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். ஆனால் ஆண்டவர் மீது நமக்குள்ள அன்பு பல காரணங்களினால் குறைந்து போகிறது. எப்படியென்றால் சில நேரங்களில் நாம் அறிந்தோ, அறியாமலோ பல தவறுகளை செய்து ஆண்டவருடைய அன்பை விட்டு விலகி சென்றுவிடுகிறோம். கர்த்தருக்குள் அதிக பக்தி வைராக்கியத்துடன் இருப்பவர்கள்கூட சில பாவ சூழ்நிலைகளுக்குள் சிக்கி கர்த்தருடைய அன்பை உதறி தள்ளிவிட்டு சென்று விடுகிறார்கள். ஒரு சிலருடைய தவறான போதனையின் நிமித்தம் வழி தவறி செல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். இப்படி பல காரியங்களை நாம் உள்ளடக்கி பார்க்கும் பொழுது கிறிஸ்துவின் மீதுள்ள அன்பு குறைந்து விடுகிறது.

கர்த்தர் பத்து கட்டளைகளை மோசேயிடம் கொடுத்தார். அதில் திருடாதே, பொய் சொல்லாதே, கொலை செய்யாதே என்று இருந்தாலும், அதைத்தான் மனிதன் துணிந்து செய்கிறான். எனவே தான் கர்த்தர், 'என்னை நேசி' என்று கூறினார். நம் முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும் அவரை நேசிக்கும்பொழுது கட்டளைகளை கடைப்பிடிப்பது இலகுவாகிவிடும். இன்றைக்கு அந்த முழு அன்பு, முழு நேசம் கர்த்தர் மேல் உங்களுக்கு இருக்கிறதா? ஏனென்றால், கிறிஸ்துவோடு கூட ஒரு ஆழமான உறவு இருந்தால் எதைச் செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது என்ற தெளிவு உண்டாகும். கர்த்தர் உங்கள் நேசராய் மாறுகின்றார். இதையே பக்தன் பவுல் **"கிறிஸ்துவுடனே நான் மரித்திருக்கிறேன், அவருக்குள் பிழைத்தும் இருக்கிறேன்" என்று கலா.2:20-ல் கூறியுள்ளார்.**

## நம்மை இரட்சிக்க கிறிஸ்து மரித்தார்!

ஒரு மரணம் எப்படி மகுடமாய் மாறமுடியும்? உதாரணமாக ஒரு தீவிரவாதியை கொன்று விட்டால் அவனுடைய மரணம் எல்லோருக்கும் சந்தோஷத்தை கொடுக்கும். ஒரு கொடூரமான ஒரு திருடனை காவல்துறையினர் கண்டுபிடித்து கொன்றால் அது பொது மக்களுக்கு சந்தோஷத்தை கொடுக்கும். ஆனாலும் அவனுடைய குடும்பத்திற்கு அந்த மரணம் சோகத்தையே கொடுக்கும். ஒரு காரியத்தை புரிந்துகொள்ளுங்கள். பிரியமானவர்களே! மரணம் என்பது சோகத்தை, வியாகுலத்தை, கொடூரமான கஷ்டத்தை கொடுப்பதாக இருக்கிறது.

இங்கு இயேசுவின் மரணமோ மனிதகுலத்திற்கே சந்தோஷத்தை கொடுத்துள்ளது. அவர் எந்த குற்றத்தையும் செய்யவில்லை. அவர் பரிசுத்தர். தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணர் என வேதம் கூறுகிறது. அப்படியென்றால் எதற்காக அவர் சிலுவை சாவுக்கு உட்படுத்தப்பட்டார்? மனிதன் செய்த பாவங்களை நிவிர்த்தி செய்கிற ஒரு கிருபாதாரபலியாக அவர் சிலுவையில் மரித்தார். நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருந்து சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டார். **நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து.....** (ஏசாயா 53:6,11-12) நம்முடைய பாவத்தை சுமந்து தீர்க்கிற ஒரு ஆட்டுக்குட்டியாக அவர் சிலுவையில் மரித்தார். அவருடைய மரணத்தின் மூலம் நாம் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலையாகி, நாம் அனைவரும் இரட்சிப்பை பெற வழிவகுத்தது. ஆகவே தான் இயேசுவின் மரணம் நமக்கு மகுடமாக விளங்குகிறது.

இயேசு கிறிஸ்து பாவமற்ற, குற்றமற்ற மகிமை நிறைந்த ஒரு தேவன். அவரால் மட்டும்தான் நமக்காக பரிந்து பேசவும் முடியும், நமக்காக ஜீவனை தரவும் முடியும். **அந்தப் பிரசன்னமாகுதலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷ ரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாத வருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டா யிருப்பதாக. ஆமென். 1 தீமோ. 6:15,16** இயேசு சாவாமையுள்ளவர்! சாவு (மரணம்) எப்படி உலகத்திற்கு வந்தது. பாவத்தினால், அக்கிரமத்தினால் நமக்கு கிடைத்த சம்பளம். "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6: 23) பாவம் நிறைந்த, குற்றம் நிறைந்த கண்களால் நாம் அவரை காண முடியாது. அதனால் "மனுஷனால் காணக்கூடாத தேவன்" என்று வேதம் கூறுகிறது. மகிமை நிறைந்தவர் அவரே. நித்தியமுள்ளவர் அவரே. ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும் ஆனவர் நமக்காக தரித்திரர் ஆனார். அவருடைய தரித்திரத்தினால் நாம் ஐசுவரியவான்கள் என்ற மகுடத்தை பெறுகிறோம்.

## நம்மை மன்னிக்க, நம்மை தேவனோடு ஒப்புரவாக்க கிறிஸ்து மரித்தார்!

நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எந்த ஒரு குற்றமும், அக்கிரமும், பாவமும், வியாதியும் இல்லாதவர். அவர் இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தர். அவர் நமக்காக மரிக்க வேண்டுமா? 'நான் எல்லோருக்கும் இரட்சிப்பை தந்து விடுகிறேன்' என்று அவர் ஒரு வார்த்தையோடு சொல்லி முடித்து இருக்கலாமே? ஏன்? எதற்காக மரிக்கவேண்டும்? என்ற கேள்வி உங்களுக்குள் வருகிறதா? **நாம் அவருக்குள் தேவனு டைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். 2 கொரி.5:21. மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. யோவான் 1:29** நம்முடைய அக்கிரமங்கள், பாவங்கள் எல்லாவற்றையும் அவர் சிலுவையில் சுமந்து விட்டார். இனி நாம் சுமக்க தேவையில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் நாம் செய்த பாவங்களுக்காக அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். ஒவ்வொரு நாளும் தேவ சமூகத்தில் பாவ மன்னிப்பு கேட்பது அவசியமானதாக இருக்கிறது. என்னிடம் பாவமில்லை, நான் நேசரின் இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கிறேன் என்ற உறுதி நமக்குள் வேண்டும். அனுதினமும் பாவ மன்னிப்பின் ஜெபத்தை நீங்கள் ஏறெடுக்கும்பொழுது அது பூரண சமாதானத்தை, சந்தோஷத்தை உங்களுக்குத் தரும். சிலர் ஏதோ ஒரு நாள் பாவ மன்னிப்பை பெற்றுவிட்டால் போதும், ஞானஸ்நானம் பெற்றால் போதும், நாம் பரலோகத்திற்கு சென்றுவிடலாம், கர்த்தர் ஒரே தரம் மரித்தார். எனவே ஒரே தரம் நமக்கு இரட்சிப்பை அளித்து விட்டார் அது போதும் என நினைக்கின்றனர். அப்படி அல்ல. இலவசமாக பெற்ற இரட்சிப்பை ஒவ்வொரு நாளும் நாம் அசட்டை செய்துக்கொண்டிருக்கிறோம். மீண்டும் மீண்டும் கிறிஸ்துவுடனே உடன்படிக்கை செய்து நம்மை புதுப்பித்துக் கொள்வது நமது பொறுப்பாக, கடமையாக இருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்களை தேவன் ஒரே நாளில் மீட்டுக்கொண்டார். அந்த இரட்சிப்பு நித்தியமாய் இருந்தது. ஒரே நாளில் லட்சக்கணக்கான பேர் எகிப்தில் இருந்து வெளியேறினார்கள். அதுவே அவர்களின் இரட்சிப்பின் நாளாக இருந்தது. அதற்குள் அவர்கள் களிகூராமல், ஒவ்வொரு நாளும்

ஒவ்வொரு பிரச்சனையை கொண்டு வந்தார்கள். எனவே தேவன் அவர்களை வெறுத்தார். பிரியமானவர்களே! முறுமுறுத்த இஸ்ரவேல் ஜனங்களை போல நாம் ஒருபோதும் இருக்கக்கூடாது. அனுதினமும் தேவன் நமக்கு அருளின இரட்சிப்பிற்காக அவரை துதிக்க வேண்டும். அந்த இரட்சிப்பிலிருந்து நாம் விலகிவிடாமல் நம்மை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

## நாம் நித்தியத்தை ருசிக்க கிறிஸ்து மரித்தார்!

ஜீவாதிபதியாகிய கர்த்தர் நம்மை போல மரணத்தை ருசி பார்த்ததற்கு ஒரு நோக்கம் இருந்தது. நாம் தூதர்களுடைய மகிமையை ருசிக்க வேண்டும் என்றும், தேவனுடைய மகிமையை ருசிக்க வேண்டும் என்று தான் அவர் நம்முடைய மரணத்தை ருசி பார்த்தார். நாம் நித்தியத்தை ருசிக்க வேண்டும் என்பதற்காக அவர் மரணத்தை ருசிபார்த்தார். **ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது. எபிரெயர் 2:10** தம் பிள்ளைகளை மகிமையான வாழ்வுக்கு கொண்டு வருவது தேவனுக்கு ஏற்றதாயிருந்தது. எனவே தான் பிலிப்பியர் 2:7,8-ல் மனிதன் தேவனின் சாயலாக உருவாக்கப்பட்டான் என்று எழுதப்பட்டுள்ளது. எபிரெய மொழியில் இந்த சாயல் என்ற வார்த்தைக்கு பல அர்த்தங்கள் உள்ளது. தேவன் ஆவியாக இருக்கிறார் அவருக்கு எப்படி உருவம் இருக்கிறது என்ற கேள்வி எழலாம். அதனால் தான் தேவன் மனுஷனை உருவாக்கும்பொழுது எல்லா படைப்பிற்கும் அவனை மகுடமாக்கினார். ஆளுமையை மனுஷனுக்கு கொடுத்தார். தேவனின் சாயல் என்ற வார்த்தைக்கு, ஆளுமையும், பரிசுத்தமும், மகுடமும் முக்கியமான அர்த்தமாக கருதப்படுகிறது. இவை எல்லாவற்றையும் ஆதாமுக்குக் கொடுத்து ஏதேனில் அவனை உலாவ வைத்தார். ஆனால் மனுஷனோ பிசாசின் சாயலை தெரிந்து கொண்டான். பிசாசின் சாயலை எடுத்தவுடன் மனுஷன் தேவ சாயல் அற்றவனாய் மாறினான். ஆனால் தெய்வம் மனுஷனின் சாயலை மீண்டும் எடுத்தார். தேவனின் சாயல் நித்தியம்! அன்பு! ஆரோக்கியம்! ஐக்கியம்! ஆனால் மனுஷன் தேவனுக்கு பிரியமில்லாத பாவ சாயலை தெரிந்து கொண்டபடியால் மீண்டும் நமக்காக ஒரு மரணத்தின் சாயல் எடுத்து நம்முடைய எல்லாவிதமான கஷ்டங்களையும் அவர் ருசித்து பார்க்கிறார்.

பிரியமானவர்களே! நம்முடைய இக்கட்டான நேரத்தில் அல்லது ஒரு அவசர தேவைக்கு ஒருவரை உதவிக்கு அழைக்கிறோம் என்றால், அவரும் நம்மைப்போல ஒரு இக்கட்டான சூழ்நிலையை கடந்து வந்தவர்களாக இருந்தால், உடனே விரைந்து வந்து அந்த நேரத்தில் முழு மனதோடு நமக்கு உதவி செய்வார்கள். இங்கே நம்மை படைத்த தேவன் அதையே செய்கின்றார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டபொழுது அவர் மனுஷனுடைய மரணத்தை ஏற்றுக்கொண்டார். ஏமாற்றங்களை, பாவங்களை, வியாதிகளை, சாபங்களை என சகலத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார். சிலுவை மரண பரியந்தம் தம்மை தாழ்த்தினார். **அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் - பிலிப்பியர் 2: 8**

## நம்முடைய அக்கிரமங்களை நீக்க கிறிஸ்து மரித்தார்!

மனிதன் தன் சுயநலத்திற்காக

ஒவ்வொருநாளும் செய்கிற அக்கிரம செயல்கள் ஏராளம் ஏராளம். தேவன் யோனா தீர்க்கதரிசியிடம் 'அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது' என்றார். ஆம். நாம் துணிந்து செய்கிற அனைத்து அக்கிரம செயல்களும் தேவ சமூகத்தில் சென்றுக்கொண்டிருக்கிறது. அதற்கு முடிவு உண்டாக்குவதற்காக, நம்முடைய எல்லா அக்கிரமங்களையும் தேவன் இயேசுகிறிஸ்துவின் மேல் விழப்பண்ணினார். இரட்சிப்பிற்கு முன் ஏதோ ஒரு நாள் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்கள் ஒரு நாளும் உங்களை குற்றப்படுத்திக்கொண்டே இருக்கக்கூடாது. ஏனென்றால் இயேசு சிலுவையில் அதை முற்றிலும் ஜெயித்து விட்டார். பாவத்திலிருந்தும், குற்ற மனசாட்சியிலிருந்தும் கிறிஸ்துவின் சிலுவை மரணம் உங்களுக்கு விடுதலையை கொடுக்கிறது. ரோமப்பேரரசனுக்கும், ரோமப் போர்சேவகர்களுக்கும் இதே மனநிலை தான். நாங்கள் தெரியாமல் இயேசுவை சிலுவையில் அறைந்து விட்டோம். அவரை விடுதலையாக்கி இருந்திருக்கலாமே, தெரிந்தோ, தெரியாமலோ இப்படி செய்து விட்டோம் என்றார்கள். ஆனால் அந்த அக்கிரமத்தையும் தேவன் சிலுவையில் சுமந்தார். அதனால் தான் சிலுவையில் இவர்களை மன்னியும் என்று இயேசு கூறினார். இயேசு தம் சிலுவை மரணத்தின் மூலம் உங்களை இன்று மன்னிக்கிறார்.

பிரியமானவர்களே! நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் ஒவ்வொரு நாளும் அந்த மன்னிப்பை ருசி பார்க்க வேண்டும். தினந்தோறும் கர்த்தாவே! உம்முடைய மரணத்திற்காக, உம்முடைய மன்னிப்பிற்காக நன்றி என்று சொல்ல வேண்டும். சமீபத்தில் பிரிட்டிஷ் சேனல் எடுத்த குறும்படம் ஒன்றை சமூக வலைதளத்தில் நான் காண நேர்ந்தது. அந்த குறும்படம், இஸ்ரவேல் தேசத்தில் மற்றும் எருசலேமில் ஆராய்ச்சி செய்து அவர்கள் எடுத்த அந்த குறும்படம் மிகவும் அழகாக, நேர்த்தியாக இருந்தது. அதில் "கிறிஸ்துவின் சிலுவை மரணமானது சரீரப் பிரகாரமாக எவ்வளவு வலி நிறைந்ததாக, கொடூரம் நிறைந்ததாக இருந்திருக்கும் என்றும் மருத்துவர்களை வைத்து அழகாக ஆராய்ச்சி செய்திருந்தார்கள். இயேசுவை அடிக்க பயன்படுத்தின சாட்டை எவ்வளவு நீளமாக இருந்தது? ஆணிகள் எப்படி இருக்கும்? மனிதனை அடிக்கும்பொழுது எப்படி வலிக்கும் என்பதை எல்லாம் அதில் காண முடிந்தது? உலகத்திலேயே மனிதனால் தாங்கக் கூடாத ஒரு வலி என்றால் இன்றைக்கும் சரி என்றைக்கும் சரி முதலிடத்தில் இருப்பது பிரசவ வலி தான். ஆனால் சிலுவை மரணம் அதைவிட ஒருபடி மேலானது. ஆராய்ச்சி செய்த விஞ்ஞானி, "ஒரு மனிதன் அனுபவிக்கும் வேதனை, வலி தாங்க முடியாதபொழுது அவனுடைய உயிர் பிரிந்து விடும்" என கூறினார். ஆனால் கிறிஸ்துவோ தேவனாக இருந்தபடியால் எல்லா அக்கிரமங்களையும் சுமந்தாக வேண்டும் என்பதால் அவர் முழு வலியையும், முழு உபத்திரவத்தையும் பொறுமையோடு ஏற்றுக்கொண்டார்.

அன்பான தேவ ஜனங்களே! இன்றைக்கு உங்களுக்கு சரீரத்தில் வலி வேதனையா, தாங்க முடியாமல் துன்பப்படுகின்றீர்களா? சிலுவையை நினைத்துப்பாருங்கள்! அவருடைய தழும்புகளால் சுகமாவீர்கள். அவருடைய இரத்தத்தால் உங்களுக்கு சுகம் உண்டு, உங்களுக்கு விடுதலை உண்டு. ஏனெனில் நம்முடைய வியாதியை ஏற்கனவே அவர் சிலுவையில் சுமந்துவிட்டார். நமக்கு அநேக சமயங்களில் உடல்நிலையில் உள்ள வியாதிகளை தவிர, மனவியாதி தான் அதிகமாக உள்ளது.. மனதின் போராட்டங்கள் தான் அதிகமாக இருக்கிறது. **"அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது"** லூக்கா 22:44ல் **"அவருடைய வேர்வை துளிகள் இரத்தம் போல கீழே விழுந்ததாக"** எழுதுகின்றார். இன்றைக்கு உங்களுடைய வாழ்க்கையில் கடன் பிரச்சனைகள், ஏமாற்றங்கள், துரோகங்கள்

ஒரு வேர்வை துளியை போல தோன்றி இரத்தம் போல கீழே விழலாம். அன்றைக்கு கிறிஸ்துவின் இரத்தத் துளிகள் எப்படி இருந்தது. இந்த மனுக்குலத்தின் பாடுகளை நான் சுமக்க வேண்டுமே? என்பதால் அவர் வேர்வை இரத்த துளிகளாய் மாறியது. இன்றைக்கு நம்முடைய வேர்வை துளிகள் என்னவாயிற்று. ஒவ்வொரு நாளும் இந்த காரியத்தை எப்படி சமாளிப்பேன். என்னுடைய படிப்பில் எப்படி வெற்றி பெறுவேன். எனது கடன் பிரச்சனைகள் தீருமா. எனது இருளான வாழ்க்கை ஒளி பெறுமா? என் பிள்ளைகளின் வாழ்க்கை என்ன ஆகுமோ? என்று கலங்கி கொண்டிருக்கிறீர்களா? மனங்கலங்காதீர்கள்! உங்கள் மனநிலை. உங்கள் கஷ்டங்கள் கர்த்தருக்கு நன்றாக தெரியும். கெத்சமனே தோட்டத்தில் மனதளவில் இயேசு அனுபவித்த வேதனை, சிலுவை மரணத்தின் வேதனையை விட மிகவும் பெரியது. அது சுவிசேஷ புத்தகங்களில் மிகவும் அழகாக எழுதப்பட்டுள்ளது. உலகத்தையும், அதிலுள்ளவைகளையும் தேவன் தாமே படைத்தார். அவர் உண்டாக்கிய கைகளே அவரை சிலுவையில் அறையும்படி, இயேசு சிலுவையில் தம்மைத் தாமே தாழ்த்தினார். நம்முடைய வியாகுலங்களை நன்கு அறிந்து, ருசித்த தேவன், அதை சிலுவையில் ஆணி அடித்து விட்டார். லாசரு மரித்த பொழுது இயேசு கண்ணீர் விட்டார். அந்த மரணத்தின் வலி, அந்த இழப்பின் வலியை மனுஷனாய் இருந்து கிறிஸ்து ருசித்தார். மரணத்தை ஜெயமாக விழுங்கினார். கிறிஸ்துவின் சிலுவை அன்பு அதை செய்தது. மனுஷனுக்காக இறங்கி வந்த அன்பு தெய்வம் இயேசு ஒருவரே.

அன்பு என்றாலே ஒரு சில குணாதிசயங்கள் இருக்க வேண்டும். இவை எல்லாம் தேவனிடத்தில் இருந்தது. **"அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவான் 4:8)** இன்றைக்கு எங்கெங்கோ அன்பை தேடி அலைகிறோம். சிலுவையின் அன்பை ருசித்து பாருங்கள். உங்கள் உறவுகள் அல்லது நண்பர்கள் யாராவது உங்களிடம் பேசவில்லையா, மனங்கலங்காதீர்கள்! கர்த்த ரிடம் பேசுங்கள், அவர் பார்த்துக் கொள்வார். நாம் தேவனிடம் தெரிவிப்பதுதான் நமது வேலை. அவற்றை தேவன் பார்த்துக்கொள்வார். தேவனிடம் பேசுவதை அதிகப்படுத்துங்கள். ஆம், தேவனோடு நல்ல ஐக்கியம் உங்களுக்கு உண்டாகும்பொழுது அவர் பெரிய காரியங்களை உங்கள் வாழ்க்கையில் செய்வார். அத்துடன் கிறிஸ்துவின் சிலுவை அன்பை நீங்கள் ருசிக்க ஆரம்பியுங்கள். அவ்வாறு ருசிக்கும்பொழுது முதலாவது உங்கள் பாவத்திலிருந்தும், பல்வேறு விதமான குற்றங்களிலிருந்தும், பரம்பரை சாபங்களிலிருந்தும், வியாதியிலிருந்தும், பிசாசின் பிடியலிருந்தும் விடுதலையாவீர்கள். **சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் - யோவான் 16: 13**

மரணத்தை அவர் ஜெயித்த பொழுதே உலகத்தின் சாபத்தையும் அவர் ஜெயித்து விட்டார். உங்களுடைய பாவத்தை, வியாதியை அவர் வென்றார். நீங்கள் இதை நம்பும் பொழுது அவர் உங்களை தெரிந்துகொள்வார். உங்களை கரம் நீட்டி அணைத்துக் கொண்டு அந்த மகுடத்தை உங்கள் மேல் வைப்பார். நீ என்னிடத்தில் வா என்று அன்போடு அவர் அழைக்கிறார். பெரும்பாடுள்ள ஸ்தீரியை எல்லோரும் ஒதுக்கினார்கள், இந்த ஸ்தீரியால் அவரை கூப்பிட கூட முடியவில்லை. **"இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டாள் சுகமானாள்"** ஜனத்திரள் அந்த ஸ்தீரியை நசுக்கியது, அங்கிருந்த மனு ஷர்களை குறித்து கூட அவள் பார்க்கவில்லை. அவள் பார்த்தது இயேசுவை! அந்த கூட்டத்தில் எழுந்து கூட நிற்க முடியாமல் தவழ்ந்து தவழ்ந்து வந்த அந்த ஸ்தீரி மிகப்பெரிய அற்புதத்தை பெற்றதோடு, இயேசு தன்னிலிருந்து வல்லமை

புறப்பட்டதை அங்கு சொல்லி அந்த ஸ்திரியையும், அங்கிருந்த ஜனங்களையும் ஆச்சரியப்பட வைக்கின்றார்.

அன்பானவர்களே! இன்றைக்கு பெரிய ஜனத்திரளின் மத்தியில் நீங்கள் இருக்கலாம், நன்கு படித்திருக்கலாம், பரிசுத்தமாக இருக்கலாம், கீழே இருந்தவர்கள் எல்லாம் மேலே போய் கொண்டே இருக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கலாம். என்னை யாரும் கண்டுகொள்வதில்லையே என்று எண்ணாதீர்கள். நித்தியமாய் உங்களை ஒருவர் தெரிந்தெடுத்து விட்டார். **"நான் நேசருடையவன், என் நேசர் என்னுடையவர்"** என்று அறிக்கை செய்யுங்கள். ஒவ்வொரு நாளும் நீங்கள் அவரை நேசிக்கும் பொழுது அந்த நேசம் உங்களுக்குள் ஒரு ஜீவ ஊற்றாய் பெருகும். அது அற்புதமாகவும், மகுடமாகவும் மாறும்.

**நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார் - எபிரேயர் 4: 15**

எல்லாவிதத்திலும் இயேசு நம்மைப் போல சோதிக்கப்பட்டார். அதனால தான் 'மனுஷனுடைய சாயலாக அவர் வந்தார்' அப்படி என்றால் மனுஷனுடைய குணங்களை, பாவம், அக்கிரமம், சாபம் எல்லாவற்றையும் அவர் சிலுவையில் சுமந்து தீர்த்து விட்டார். ஆனால் நாமோ அதை இன்னும் சுமந்து கொண்டு, ஊரெல்லாம் சொல்லிக்கொண்டே இருக்கிறோம்.

பிரியமானவர்களே. அவர் பரிசுத்தராக இருந்தார். பாவத்தை பாராத சுத்த கண்ணர் அவர். பாவிகளுக்காய் இறங்கி வந்தும் பாவத்திற்கும் அவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லாமல் இருந்தது. முதலாவது நாம் கிறிஸ்துவுடனே மரிக்க வேண்டும். நம்முடைய எல்லாவிதமான எதிர்மறையான எண்ணங்கள் எல்லாவற்றையும் சிலுவையில் அறைந்து விடுவோம். அப்படி நீங்கள் அறையும் பொழுது எல்லாம் புதியதாகும். **"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின"** (2 கொரி. 5:17) கிறிஸ்துவுக்குள்ளாக நாம் இருக்கும்பொழுது நாம் புதிய சிருஷ்டியாக மாறுகிறோம். மகிமை நிறைந்த சிருஷ்டியாக காணப்படுவோம். மகுடம் நிறைந்த வாழ்க்கை எப்பொழுது வரும், கிறிஸ்துவுடனே கூட நாம் பிழைக்கும் பொழுது உண்டாகிறது. ஒரு முறை நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்கள் என்று உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். இயேசுவே உம்முடைய சிலுவைக்கு முன்பாக நான் வருகிறேன். அந்த நிழலில் நான் தஞ்சமாகிறேன்! என்னை நானே அந்த சிலுவையில் மரிக்க ஒப்புக் கொடுக்கிறேன். என்னுடைய எல்லாவிதமான கஷ்டத்தையும் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள், ஏற்றுக்கொள்ளுங்கள். உம்மோடு நான் பிழைக்க வேண்டும் என அறிக்கை செய்யுங்கள். தேவனோடு நீங்கள் பிழைக்க வேண்டும் என்றால், அவருடைய வார்த்தையை நம்புங்கள். **ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித் தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்** - ரோமர் 6: 8,10,11 பாவத்திற்கு நீங்கள் மரித்தவர்களாகவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்குள்ளாய் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள், சாபங்களுக்கு, ஏமாற்றங்களுக்கு, பிசாசின் தந்திரங்களுக்கு மரித்தவர்களாய் எண்ணிக்கொள்ளுங்கள்.

நீங்கள் இயேசுவுடனே கூட மரிக்கும்பொழுது உங்கள் கல்லறைகள் திறக்கப்படுகிறது. அவர் உலகத்தை ஜெயித்திருக்கிறார்.

அந்தப் பிரசன்னமாகுதலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்.

ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென். 1 தீமோ. 6: 15, 16

உங்களை பாவத்திலிருந்து விடுதலை யாக்கவே அவர் தம்முடைய ஜீவனை தந்தார். பிரியமானவர்களே! கலங்காதீர்கள்! கர்த்தர் உங்களை எல்லா தீமையிலிருந்து பாதுகாத்து வழி நடத்தி, நித்தியத்திற்கு தகுதிப்படுத்துவார். இயேசு உங்களுக்காகவே மரித்தார் என விசுவாசியுங்கள். அவருடைய மரணத்தின் மூலம் பரலோகத்தில் உங்களுக்குரிய மகுடம் ஆயத்தமாக இருக்கிறது.

## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in




மணியார்டர் (MO), காசோலை (Cheque), வரைவோலை (DD), Online Donation (Website) Bank Account, QR code, UPI, Google pay, Paytm, Phonepe.

முகவரி: அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, (80 அடி ரோடு), தில்லைநகர், திருச்சி 620018

Paytm · G Pay · UPI · PhonePe

English WhatsApp No: +91 94889 32937
Tamil WhatsApp No: +91 95004 87059



ministryofjesushr@gmail.com
WE'RE
HIRING
Typist
TAMIL - ENGLISH




வயதானவர்களை கவனித்துக்கொள்ள பொறுப்பான
ஆண், பெண் உதவியாளர்கள் தேவை!
கல்வித்தகுதி : பள்ளி படிப்பு
வயது வரம்பு : 25 வயது முதல் 40 வரை
தொடர்புக்கு : 9488845628, 9150333889
முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் 10-வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18




வங்கிக் கணக்குகளின் விபரம்
MINISTRY OF JESUS
A/C NO. 10848474869
ANBARIN OOZHIYAM
A/C NO. 10848559426
DR. ANANDA STIRA
A/C NO. 10848469699
IFS Code: SBIN 0000930
State Bank of India, Cantonment, Trichy Main Branch.
(10.00 AM - 6.00 PM)








சிறியவனைப் புழுதியிலிருந்து
தூக்கி, உயர்த்தின
கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!



# Happy 73rd Birthday













DR. ஆனந்த ஸ்திரா
அவர்களின் நல்ல
உடல் நலத்திற்காகவும்,
குடும்பத்தினருக்காகவும்,
ஊழியத்திற்காகவும்
ஜெபியுங்கள்



# துதி அறிக்கை



## ஆபத்திலிருந்து பாதுகாத்தார்!

கடந்த ஆண்டு மே மாதம் நாகர்கோவில் விஜயதா திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். கூட்டம் முடிந்து தனிஜெப வேளையில் Mrs. மார்கிரேட் ஸ்திரா அம்மா எனக்காக ஜெபித்தார்கள். ஜெபத்தின் இறுதியில் கர்த்தர் உன்னை எல்லா நெருக்கடியினின்று பாதுகாத்து சாட்சியாக நிறுத்துவார் என தீர்க்கதரிசினமாக சொன்னார்கள்.

என்னுடைய இரண்டு மகன்களும் பஸ் கண்டக்டராக வேலை செய்கிறார்கள். மூத்த மகனுடைய வேலையில் பல பிரச்சனைகள் ஏற்பட்டது. உடனே அன்பரின் ஊழியத்திற்கு போன் மூலம் ஜெபிக்கும்படி சொன்னேன். கர்த்தர் அதிலிருந்து விடுவித்தார். இளைய மகன் சென்றுக்கொண்டிருந்த பேருந்தில் திடிரென தீ விபத்து ஏற்பட்டது. அந்த நேரத்தில் பயணம் செய்த 13 பேருக்கும் எந்த பாதிப்பும் இல்லாமல் கர்த்தர் அற்புதமாக அனைவரையும் பாதுகாத்தார். எங்கள் வீட்டிற்குள் இரண்டு விஷ ஜந்துக்கள் வந்தது. அப்பொழுதும் கர்த்தர் தாமே எங்கள் உயிரையும் பாதுகாத்தார். இத்தனை நெருக்கத்திலும் எங்களை பத்திரமாக வழிநடத்தி வருகிற கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.

- திருமதி. பாப்பா. நாகர்கோவில்



## உடைந்து போன எங்களை தேற்றினார்!

எங்களுடைய குழந்தை ஒரு நாள் தவறி தண்ணீரில் விழுந்து இறந்துவிட்டதால் நாங்கள் அனைவரும் மிகுந்த துக்கத்தில் சமாதானம் இல்லாமல் வாழ்ந்து வந்தோம். அந்த நேரத்தில் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் எங்களுக்காக ஜெபித்து ஆறுதல்படுத்தினார்கள். ஐயா கூறிய வார்த்தைகளினால் எங்களுக்கும் கர்த்தர் மீது நம்பிக்கை வந்தது. எங்கள் குடும்பம் பிரியாதபடி இன்று வரை நாங்கள் நிலைத்து இருப்பதற்கு கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- திரு. ஆரோக்கிய ஜெனோ. நாகர்கோவில்.



## 20 வருடத்திற்கு பிறகு குழந்தை பாக்கியம் கிடைத்தது!

என்னுடைய தங்கைக்கு திருமணம் ஆகி 20 வருடங்களாக குழந்தை இல்லை. 2010-ம் ஆண்டு திருநெல்வேலி செல்வி மஹாலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்த பொழுது, உன் சந்ததி மேல் என் ஆவியை ஊற்றுவேன் என் வாக்குத்தத்தத்தை அன்றைய நாளில் கர்த்தர் எனக்கு தந்தார். மிகுந்த சந்தோஷத்துடன் சென்றேன். தொடர்ந்து அந்த வாக்குத்தத்த வசனத்தை பிடித்துக்கொண்டு என் தங்கைக்காக ஜெபித்தேன். 2023ம் வருடம் என் தங்கைக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறக்கும்படி கர்த்தர் அற்புதம் செய்தார். பிரசவ நேரத்தில் தங்கை அதிக கஷ்டப்பட்டாள், குறைமாதத்தில் குழந்தைகள் பிறந்தாலும் கர்த்தர் தாமே இன்று வரை இரு குழந்தைகளையும் அற்புதமாக பாதுகாத்து வருகிறார். தேவனுக்கே மகிமை!

- திருமதி. ஜெஸிந்தா ராணி, சாந்தி நகர்.



## பெலவீனம் மறைந்தது!

என்னுடைய கணவரின் மூக்கில் ஒரு சில பிரச்சனைகள் ஏற்பட்டது. மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்தப்பொழுது மூக்கில் உள்ள எலும்பு வளைந்திருக்கிறது என மருத்துவர் சொல்லிவிட்டார். அந்த நேரத்தில் என்னுடைய அதனை நாகர்கோவிலில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்து என் கணவருக்காக ஜெபித்தார்கள். அன்பரின் ஊழிய ஜெப எண்ணெயை கொண்டு வந்து என் கணவருடைய மூக்கில் தடவினார்கள். இன்று வரை மூக்கில் எந்த பிரச்சனையும் இல்லை. சளிகூட பிடிப்பதில்லை. கர்த்தர் அற்புதமாக பாதுகாத்து வருகிறார். சுகம் தந்த கர்த்தரை மனதார துதிக்கிறேன்.

- திருமதி. மீரா, குளச்சல்.

## நன்றாக பேசுகிறான்!



இரண்டு வருடத்திற்கு முன்பு மதுரையில் நடைபெற்ற கூட்டத்தில் நாங்கள் கலந்துக்கொண்டோம். எங்களுடைய மகனுக்கு பேச்சு சரியாக வராத காரணத்தினால் மகனுக்காக ஜெபிக்கும் படி Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் சொன்னோம். உடனே ஐயா பாரத்துடன் ஜெபித்தார்கள். அதன்பிறகு மகன் நன்றாக பேச ஆரம்பித்தான். மற்ற குழந்தைகளைப் போல நார்மலாக இருக்கிறான். மகனை பேச வைத்த கர்த்தரை துதிக்கிறேன்.

- திரு. ஜான் மார்ஷல், மதுரை.

## ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் நடைபெற்ற கூட்டத்தில் அற்புத சுகம் பெற்றவரின் சாட்சி

# உயிருக்கு ஆபத்தான நிலையிலிருந்து விடுவித்து என் வாழ்நாளைக் கூட்டிக்கொடுத்த கர்த்தர்!



**அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார், கர்த்தராகியதேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமி யிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கி விடுவார், கர்த்தரே இதைச் சொன்னார். ஏசாயா 25:8**

நான் நீண்டகாலமாக சரீர பெலவீனத்தினாலும் வியாதியினாலும் பல பாடுகளை அனுபவித்து வந்தேன். முடிவில் என்னுடைய இரண்டு சிறுநீரகங்களும் செயலற்று போய்விட்டது. டயாலிசிஸ் அவசியம் செய்ய வேண்டும் என மருத்துவர் கூறினார். டயாலிசிஸ்-ஐ தாங்கும் சக்தி என் சரீரத்தில் இல்லை. அத்துடன் என்னுடைய நுரையீரல் மிகவும் பெலவீனமாகி தண்ணீர் சேர்ந்து விட்டது. மூச்சு விட முடியாமல் ஆக்ஸிஜனில் இருந்தேன். ஒரு நாள் சுயநினைவை இழந்து, ஆபத்தான நிலைக்கு வந்துவிட்டேன். உடனே தீவிர சிகிச்சை பிரிவில் என்னை அனுமதித்தார்கள்.

என்னுடைய அக்கா பத்மாவதி மற்றும் என் உறவினர்கள் அனைவரும் என் நிலையை கண்டு கலங்கினார்கள். நான் மரணத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தேன். இந்நிலையில் எனது அக்கா பத்மாவதி அன்பு சகோதரர் Dr. ஆனந்த ஸ்திரா அவர்களை தொலைப்பேசியில் தொடர்புகொண்டு, எனது நிலையை தெரிவித்தார்கள். உடனே ஐயா அவர்கள் எனக்காக அதிக பாரத்தோடும் ஜெபித்தார்கள். 'இயேசுவின் ஜீவன் எனக்குள் வருகிறது என்றும், புதிய உறுப்புகளை தந்து, மரணத்திலிருந்து விடுவிப்பார்' என்றும் கூறினார்கள்.

சகோதரர் ஜெபிக்கும் பொழுது உண்மையாகவே இயேசு என் அருகில் வந்தார். என் நுரையீரல், சிறுநீரகங்களை தொட்டார். மரணப் பள்ளத்தாக்கிலிருந்து என்னை தூக்கி எடுத்தார். கெட்டுப்போன நுரையீரல் மீண்டும் செயல்பட ஆரம்பித்தது. புது ஜீவன் எனக்குள் வந்தது. நன்றாக மூச்சு எடுக்க ஆரம்பித்தேன். சுயநினைவு திரும்பியது. எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களே மிகவும் ஆச்சரியப்பட்டனர். பரிபூரண சுகம் பெற்று வீட்டிற்கு வந்தேன். இப்பொழுது கர்த்தருடைய கிருபையினால் நலமுடன் இருக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

\- திருமதி.நிர்மலா, விஜயவாடா.

# WANTED
## ACCOUNTANT
(B.Com. / M.Com. Graduates)
Candidates with Experience
Preferred

ministryofjesushr@gmail.com



# We Are Hiring!!
## PRAYER WARRIORS
Language Known
Tamil, English,Telugu

ministryofjesushr@gmail.com

Male / Female || Christians Preferred





## CAMERA MEN / VIDEO EDITORS
## GRAPHIC DESIGNER
(Any UG/PG Candidates)

Skills Required :Able to work in Adobe Photoshop, Adobe Illustrator, CorelDraw, Adobe Premiere Pro & After Effects

Male / Female, Christians Preferred

Apply to: ministryofjesushr@gmail.com

**Telugu WhatsApp No: +91 91770 87860**

# MARCH 2026
## தினசரி வாக்குத்தத்த வசனம்

1 ...அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத்தேயு 16:24)

2 நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். (ஏசாயா 53:5)

3 நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; (ஏசாயா 53:5)

4 நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 6:6)

5 ஏனெனில் அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார். (2கொரி.13:4)

6 என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; (ஏசாயா 53:11)

7 கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்;.(கலாத்தியர் 2:20)

8 பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார். (எபேசியர் 2:16)

9 அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். (கலாத்தியர் 6:14)

10 அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு..., சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். (பிலிப்பியர் 2:8)

11 அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, ...(கொலோசெயர் 1:20)

12 சிலுவையிலே வெற்றிசிறந்தார். (கொலோசெயர் 2:15)

13 ...அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். (எபிரெயர் 12:2)

14 அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; (1பேதுரு 2:24)

15 சிலுவையைப் பற்றிய உபதேசம்.... இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. (1கொரிந்தியர் 1:18)

# MARCH 2026
## தினசரி வாக்குத்தத்த வசனம்

**16** மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். (ஏசாயா 53:4)

**17** மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்....(ரோமர். 6:9)

**18** ....கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். (எபேசியர் 2:5)

**19** பாவத்தின் சம்பளம் மரணம்; (ரோமர் 6:23)

**20** கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார். (1கொரிந்தியர் 15:3)

**21** மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும்உயிரோடிருக்கிறேன். (வெளி. 1:18)

**22** நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் (அப்போஸ். 2:36)

**23** ....அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். (எபிரெயர் 2:18)

**24** அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசாயா 53:5)

**25** அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார். (ஏசாயா 53:11)

**26** ...தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர் 6:23)

**27** ...அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை. (அப்போஸ். 4:12)

**28** இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. (எபே.1:7)

**29** அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். (1கொரி.1:31)

**30** உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள். (லூக்கா 21:28)

**31** விலையின்றி விற்கப்பட்டீர்கள், பணமின்றி மீட்கப்படுவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (ஏசாயா 52:3)

# ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் நடைபெற்ற கூட்டங்கள்












# புதுச்சேரியில் நடைபெற்ற அற்புதத்தின் மாலை கூட்டம்











# S.J.SAVES TRUST

## (நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை)




**அன்றியும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். எபிரேயர் 13:16**

கடந்த ஜனவரி மாதம் சேலம் மாவட்டத்தில் உள்ள முத்தம்பட்டி, வாழப்பாடி, பேளூர் ஆகிய கிராமங்களில் உள்ள ஏழை, எளிய மாணவ மாணவியர் ஐம்பது பேருக்கு S.J.SAVES TRUST மூலம் Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் புத்தாடைகளை வழங்கினார்கள். பிள்ளைகள் அனைவரும் மகிழ்ச்சியுடன் புத்தாடைகளை பெற்றுக்கொண்டனர். பிள்ளைகள் நன்கு படித்து, வாழ்வில் முன்னேறுவதற்கான நல் ஆலோசனைகளை ஐயா அவர்கள் வழங்கினார்கள்.

**உதவி பெற்ற பிள்ளைகள் அனைவரும் வருடத்திற்கு ஒரு முறைகூட புத்தாடைகளை உடுத்துவதற்கு வசதியில்லாத பிள்ளைகள் ஆவர்.** இவர்களில் ஒரு சிலருக்கு தாய் தகப்பன் இல்லை. ஒரு சிலருடைய பெற்றோர்கள் கூலி வேலைக்கு செல்பவர்கள்.

அத்துடன் ஐம்பது ஏழை தாய்மார்கள் மற்றும் ஏழை விதவைப் பெண்களுக்கு அன்றாட தேவைக்குரிய பொருட்கள், குளிர்காலத்திற்கு தேவையான போர்வை மற்றும் புரோட்டீன் பவுடர் வழங்கப்பட்டது. அனைவருக்கும் மதிய உணவாக சிக்கன் பிரியாணி, ஸ்வீட், கார வகைகளும் கொடுக்கப்பட்டது.

இந்த பணிக்கு உதவிசெய்கிற பங்காளர்கள் அனைவருக்கும் எங்களுடைய நன்றியை தெரிவிக்கிறோம். தொடர்ந்து இந்த பணிகளை சிறப்பாக செய்ய ஜெபியுங்கள். உற்சாகமாய் தாங்குங்கள். கர்த்தர் உங்கள் அனைவரையும் இன்னும் அதிகமாய் ஆசீர்வதித்து காப்பாராக!









## S. J. Saves Trust - ல் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய

**Bank A/C Name:** SJ SAVES TRUST

**Account No:** 019150310875369

**Bank Name:** Tamilnadu Mercantile Bank

**Branch:** Palakarai, Trichy

**IFSC Code:** TMBL 0000019

**A/C Type:** Current








இன்றைய காலகட்டங்களில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சமூக வலைதளங்களைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், சிறுவர்கள் பலரும் இதில் மூழ்கிக் கிடப்பதால் கவனக்குறைவு, தூக்கமின்மை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் அவர்களுக்கு ஏற்படுகின்றன. எனவே 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவதற்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் தடை விதித்தது. இந்தத் தடையானது கடந்த ஆண்டு டிசம்பர் முதல் அமலுக்கு வந்தது. ஸ்பெயின், பிரான்சிலும் சிறுவர்கள் சமூக வலைதளங்கள் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இங்கிலாந்திலும் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் சமூக வலைதளங்கள் பயன்படுத்த தடை விதிக்கும் சட்டம் விரைவில் கொண்டு வரப்படும் என அந்நாட்டு பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார். சமூக ஊடக தடை சட்டத்திற்கான ஆலோசனை கடந்த மாதம் தொடங்கப்பட்டது. விரைவில் இதற்கான சட்டம் கொண்டு வரப்படும் என தெரிவித்தார்.

வங்கதேச நாட்டின் புதிய பிரதமராக கலீதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் பதவி ஏற்றுக்கொண்டார். 17 வருடத்திற்குப் பிறகு சொந்த நாடு திரும்பிய நிலையில் தேர்தல் களத்தில் நின்று வெற்றி பெற்றுள்ளார். வங்கதேசத்தின் 13-வது நாடாளுமன்ற தேர்தல் கடந்த 12-ந் தேதி நடைபெற்றது. இதில் 297 இடங்களில் 209 இடங்களில் பிஎன்பி கட்சிவெற்றி பெற்றது. வலதுசாரி கட்சியான ஜமாத் இ இஸ்லாமி 68 இடங்களை பிடித்தது.



இந்தியாவின் முதல் நீருக்கடியில் அமையவுள்ள சாலை-ரெயில் சுரங்கப்பாதை திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இது உலகின் 2வது சாலை-ரயில் சுரங்கப்பாதையாக இருக்கும். முதலாவது ஐரோப்பாவில் அமைந்துள்ளது. இரட்டை வழிகள் கொண்ட இந்த பாதையின் ஒரு பகுதி ரெயில் பாதையாகவும், மற்றொரு பகுதி வாகனங்கள் செல்லும் சாலையாகவும் இருக்கும். அசாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா ஆற்றின் அடியில் 15.79 கி.மீ. தூரத்திற்கு ரூ.18,662 கோடி செலவில் இந்த சாலை-ரயில் சுரங்கப்பாதை கட்டப்பட உள்ளது. இது அசாமில் உள்ள கோப்பூர் மற்றும் நுமாலிகரையை இணைக்கும். பயண நேரத்தை சுமார் 6 மணி நேரத்திலிருந்து வெறும் 20 நிமிடங்களாக குறைக்கும்.


20
MARCH
Friday
Happy
Birthday
Jonathan Moses Raj Stira


விடுதலையின் ஆசீர்வாத
ஆராதனை
ஞாயிறு தோறும் காலை 9:30 மணி – 11:30 மணி
அபிஷேகம் நிறைந்த பாடல்கள், ஆவிக்குரிய தேவ செய்தி,
உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்
எந்தவிதமான வேறுபாடுமின்றி அனைவரும்
இவ்வாராதனையில் பங்கு பெறலாம்
டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10– வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு
80 அடி ரோடு, தில்லைநகர், திருச்சி – 18
தொடர்புக்கு: 99421 66066


திருச்சியில்
அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்
மார்ச்
28
சனிக்கிழமை
காலை 9:30 மணி முதல் மதியம் 2:00 மணி வரை
தேவ செய்தி :Dr. ஆனந்த ஸ்திரா குடும்பத்தினர்
அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம், 10–வது குறுக்குத்தெரு
மேற்கு விஸ்தரிப்பு (80 அடி ரோடு), தில்லைநகர், திருச்சி.
தொடர்புக்கு : செல் 94888 45627, 0431- 2741925

## நாகர்கோவிலில்
# குடும்பங்களுக்கான ஆலோசனை மற்றும் பங்காளர் சந்திப்பு

மார்ச் **07** (சனிக்கிழமை)

காலை 9:30 முதல் மதியம் 2:00 மணி வரை

ஜெபம் : Dr. ஆனந்த ஸ்திரா Mrs. மார்கிரேட் ஸ்திரா



விஜயதா மினி ஹால்.(முதல் தளம்)
WCC ரோடு, நாகர்கோவில்.

தொடர்புக்கு : 94888 45627, 82203 17472

# திருச்சியில் விடுதலையின் இரவு

மார்ச் **21** (சனிக்கிழமை)

மாலை 6:00 மணி முதல் இரவு 8:30 மணி வரை

பரவசமூட்டும் ஆராதனை அனல் பறக்கும் தேவவார்த்தை விடுதலையின் ஜெபம்

**வாருங்கள்! ஆசீர்வாதம் பெற!**

டெலிவரன்ஸ் சர்ச் .அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்
10-வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு,
80 அடி ரோடு.தில்லைநகர், திருச்சி-18



தேவ செய்தியாளர்கள்: Rev.Dr.A.ஜாஷ்வா குடும்பத்தினர்

- கூட்டத்தில் பங்குபெறுகிற அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்படும்
- my deliverance church youtube channel வாயிலாக நேரலையிலும் பார்த்து பயனடையலாம்.
- வியாதி, சத்துரு போராட்டம், கடன் பாரம், வேலை இல்லாமை மற்றும் பல்வேறு பிரச்சனைகளினால் துயரப்படும் மக்களுக்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.

தொடர்புக்கு : 99421 66066 , 94888 45627